## கல்வியின் பல்வேறு துறைகள்

முஸ்லிம்கள் ஆர்வம் காட்டி முக்கியத்துவம் அளித்துவந்த கலைகள் இரு வகையானவை, ஒன்று அடிப்படையான முதன்மையான கலைகள் மற்றும் இரண்டாவது இரண்டாம் நிலையிலான கல்வித்துறைகள்.

### அடிப்படை மற்றும் முதன்மையான கலைகள்

இந்தக் கலைகள் அனைத்துமே திருக்ஃகுர்அன், நபிமொழிகள், மார்க்க அடிப்படைகள், இலக்கியம் மற்றும் வரலாறு அகிய துறைகளைச் சார்ந்த வையாகும. இந்தக் கலைகள் அனைத்துமே முஸ்லிம்களால் தோற்றுவிக் கப்பட்டவை, முஸ்லிம்கள் இவற்றை வேறு யாரிடமிருந்தும் பெறவு மில்லை, கற்கவுமில்லை, அவையாவன:

### திருக்ஃகுர்ஆன் ஓதும் கலை

திருக்ஃகுர்ஆன் அருளப்பட்டபின் திருக்ஃகுர்அன் ஓதும் கலை தேவையின் அடிப்படையில் உருவானது. ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் அரபிமொழி யின் வழக்குமொழியில் வேறுபாடு காணப்பட்ட காரணத்தினால் இறைத் தூதர் ﷺ அவர்களுக்கு எளிதாக்கித்தரும் வகையில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறையில் அருளப்பட்ட திருக்ஃகுர்ஆன் வசனங்களை ஓதிக்காண்பித்தார் கள். நபித்தோழர்கள் (ர) திருக்ஃகுர்ஆன் மனனம் செய்வதிலும் அதன் வசனங்களை எழுதி வைத்தல் மற்றும் மற்றவர்களுக்குக் கற்பிப்பதில் மிக்கக் கவனம் செலுத்தினர். நபித்தோழர்களில் பிரபலமான ஃகாரிகளுள் (பன்: ஃகுர்ரா) ஹஜ்ரத் அலி பின் அபீ தாலிப் (ர) அவர்கள், ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் அஃப்பான் (ர) அவர்கள், ஹஜ்ரத் உபை பின் கஅப் (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜ்ஸைத் பின் த்ஸாபித் (ர) அவர்கள், ஹஜ்ரத் அபூ மூசா அஷ்ஃஅரீ (ர) அவர்கள், ஹஜ்ரத் அலி சாலிம் மவ்லா அபீ ஹுத்ஜைஃபா (ர) அவர்கள், ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஃஊத் (ர) அவர்கள், ஹஜ்ரத் அபுத் தர்தா (ர) அவர்கள் மற்றம் ஹஜ்ரத் முஃஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்கள் முக்கியமானவர்கள்.

இந்த நபித்தோழர்களிடமிருந்து (ர) மற்ற நபித்தோழர்களும் (ர) பிரபல தாபியீன்களும் (ரஹ்) இக்கல்வியைக் கற்றனர். மக்களில் சிலர் பல்வேறு ஓதும் முறைகளில் திருக்ஃகுர்அனை ஓதிவந்தனர். இவ்வகையில், பிரபல மான ஏழு ஃகிராஅத் (ஓதும்) முறைகள் ஏழு பிரபல ஃகாரிகளுடைய காலங் களில் வழக்கத்தில் கடைபிடிக்கப்பட்டு வந்தன, அவையாவன:

| | | |
|---|---|---|
| 1,2 | பஸராவில் | அபூ அம்ரு பின் ஃஅலா மற்றும் ஃஆஸிம் |
| 3 | மதீனாவில் | நாஃபிஉ |

www.uzarfalahi.com

4,5 கூஃபாவில் ஹம்ஜ்ஸ மற்றும் கசாயி
6 சீரியாவில் அப்துல்லாஹ் பின் ஃஆமிர்
7 மக்காஹ்வில் இப்னு கத்ஸீர்

இவர்கள் அனைவருமே ஃகிராஅத் முறையினை எழுதி வைப்பதிலும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதிலும் மிக்க கவனமும் முக்கியத்தவமும் அளித்து வந்தனர், அதற்கான விதிமுறைகளையும் வகுத்துள்ளனர். இவ்வகையில், ஃகிராஅத் கலை வளர்ச்சியைக் கண்டது.

**ஃகிராஆத்** என்பது ஃகிராஅத் எனும் சொல்லின் பன்மையாகும், இதன் பொருள் வாசிப்பது, ஓதுவது என்பதாகும். ஆனால், முறைசார்ந்த ஒரு கலைச்சொல் என்ற வகையில் இது ஃகிராஅத்து முறைகளின் இமாம்களில் ஒரு இமாமுடைய ஃகிராஅத் (ஓதும்) முறையினைப் பின்பற்றி திருக்ஃகுர்அனை ஓதுவதாகும். இது எழுத்துக்களின் உச்சரிப்பு மற்றும் தொனியில் மற்ற ஃகிராஅத்து முறையிலிருந்து சற்று வேறுபடும். முஸ்லிம்கள் இந்த ஃகிராஅத்து முறைகளைப் பதிவுசெய்தும் எழுதியும் வைத்துள்ளதோடு அவற்றின் விதிமுறைகள் மற்றும் ஃகிராஅத்து முறைகளின் இமாம்களின் வரலாறு, அவர்களுடைய அத்தாட்சிகள், சான்றுகள் மற்றும் அவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் அனைத்தையும் விளக்கமாக சேகரித்துப் பதிவு செய்வதில் மிக்கக் கவனமும் முக்கியத்தவமும் அளித்துள்ளனர். இந்தக் கலையின் பிரபலமான நூல்கள் கீழ்வருமாறு:

1 **அத்தய்சீர் ஃபில் ஃகிராஆத் அஸ் சப்ஃஉ**
*ஆசிரியர்: இப்னுஸ் ஸய்ரஃபி (மறைவு ஹிஜ்ரி 444)*

2 **ஜாமிஃஉல் பயான் ஃபில் ஃகிராஆத் அஸ் சப்ஃஉ**
*ஆசிரியர்: அபூ அம்ருத் தானி*

3 **அன் நஷ்ரு ஃபில் ஃகிராஆத் அல் ஃஅஷ்ரு**
*ஆசிரியர்: இப்னுல் ஜஜ்ஸ்ரி (மறைவு ஹிஜ்ரி 833)*

4 **ஃபில் ஃகிராஆத் அல் ஃஅஷ்ரு**
*ஆசிரியர்: இப்னு மஹ்ரான் அல் அஸ்பஹானி (மறைவு ஹிஜ்ரி 381)*

இல்முல் ஃகிராஆத் மற்றும் தஜ்வீது கலை மக்களுக்கு திருத்தமாகத் திருக்ஃகுர்ஆனை ஓதுவதில் மிகவும் உதவியாக இருந்தன மற்றும் அதனைத் திரிபுகளிலிருந்தும் பாதுகாத்து வந்துள்ளன. இவ்வாறே, தஜ்வீது கலை அரபி மொழியில் சிரான உச்சரிப்பின் கலை **இல்முல் அஸ்வாத்** வளர்ச்சி பெறுவதில் மிகவும் உதவியுள்ளது. பிற்காலத்தில் அறிஞர்கள் **இல்முல் அஸ்வாத்** உச்சரிப்பின் கலையினை மேம்படுத்த அதற்கான விதிகளைத் தொகுத்துள்ளனர், இதன் பலனாக மொழியியல் வல்லுநர்கள் தற்காலத்தில் மிகவும் பயனடைந்துள்ளனர்.

www.uzaifalahi.com

## தஃப்சீர் திருக்ஃகுர்ஆன் விரிவுரைகளின் கலை

இல்முத் தஃ்ப்சீர் என்பது திருக்ஃ்குர்ஆனுடைய வசனங்களின் பொருள் மற்றும் அதற்கான விரிவுரை, அதன் மூலம் கட்டளையாக்கப்பட்டுள்ள வசனங்கள், அடிப்படைக் கொள்கைகள் பற்றிய விஷயங்கள் மற்றும் மறைவான நுணுக்கமான விஷங்களைப்பற்றி ஆராய்ந்து விளக்கங்களை அளிக்கும் கலையாகும். ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ர) அவர்கள் கூறுகிறார்கள், தஸப்சீர் என்பது நான்கு வகையானதாகும்:

1 **அரேபியர்களுடைய பேச்சு வழக்கின் மூலம் விளக்கங்களை அளிப்பது**
இதனை அரபிமொழி இலக்கண அமைப்புகளின் உதவியால் அறிந்து கொள்ளமுடியும்

2 **அனைவரும் அறிந்திருக்கும் வகையிலான விளக்கங்களின் மூலம் அறிவது**
வாசகத்தைக் செவியுற்றவுடனேயே அதன் பொருளை அறிந்து கொள்ளும் நிலை, இதில் எவ்வித தெளிவின்மையோ புதிரோ இருப்பதில்லை.

3 **அறிஞர்கள் (உலமாக்கள்) நன்கறிந்துள்ள விளக்கம்**
இதனை உலமாப்பெருமக்கள் ஆய்ந்தறிந்தும் இஜ்திஹாத் மூலமும் அறிந்துகொள்வர்

4 **அல்லாஹ்வைத்தவிர யாருக்குமே தெரியான அதற்கான விளக்கம்**
இவையனைத்தும் மறைவானவற்றைப் பற்றிய விஷயங்கள்

## திருக்ஃகுர்ஆனின் தஃப்சீர் (விரிவுரைகளின்) வழங்கும் முறைகள்

1 **ஃகுர்ஆனைக் கொண்டே திருக்ஃகுர்ஆன் வசனங்களுக்கான விளக்கங்களை அளித்தல்**

2 **ஸஹீஹான சுன்னத்தினைக்கொண்டு (நபிமொழிகள்) திருக்ஃகுர்ஆன் வசனங்களுக்கான விளக்கங்களை அளித்தல்**

3 **நபித்தோழர்களின் அறிவிப்புகளின் மூலம் திருக்ஃகுர்ஆன் வசனங்களுக்கான விளக்கங்களை அளித்தல்**

4 **ஒரு தாபியீயின் அறிவிப்புகளின் மூலம் திருக்ஃகுர்ஆன் வசனங்களுக்கான விளக்கங்களை அளித்தல்**

5 **அரபிமொழி நுணுக்கங்களின் மூலம் திருக்ஃகுர்ஆன் வசனங்களுக்கான விளக்கங்களை அளித்தல்** ஏனெனில், திருக்ஃ்குர்ஆன் தெளிவான அரபிமொழியில் அருளப்பட்டுள்ளது

6 **அரேபியர்களுடைய பேச்சு வழக்கின் மூலம் விளக்கங்களை அளிப்பது**

www.uzairfalahi.com

திருக்ஃகுர்ஆனுடைய விரிவுரை (தஃப்சீர்) மேற்கூறப்பட்ட அடிப்படையி லேயே மேற்கொள்ளப்படவேண்டும். ஒரு அணுகுமுறையிலிருந்து மற் றொரு முறையினை மேற்கொள்ள முற்படுவது அந்த அணுகுமுறையின் அடிப்படையில் ஒரு வசனத்திற்கான விளக்கம் கிடைக்கப்பெறாதுபோகும் நிலையில் மட்டும் மேற்கொள்ளவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் சில வசனங்களைப்பற்றிய விளக்கங்களை அளித்துள்ளார்கள், ஆனால், நம்மிடத்தில் இறைத்தூதர் ﷺ அவர்கள் திருக்ஃகுர்ஆன் முழுவதற்குமான விளக்கவுரையாக எடுத்துக்கூறியுள்ளார்கள் என்பதற்கான ஆதாரமில்லை. ஆகவே, எந்தெந்த வசனங்களுக்கான விளக்கங்களை இறைத்தூதர் ﷺ அவர்கள் விவரித்துக்கூறியுள்ளார்களோ, அதனை மட்டும் நாம் ஆதாரப் பூர்வமான விரிவுரையாகக் கருதவேண்டும்.

தாபியீன்கள் மற்றும் அவர்களை அடுத்தக் காலக்கட்டங்களில் தஃப்சீரு டைய கலை ஹதீத்ஸ் கலையிலிருந்து தனியாகவே பிரிக்கப்பட்டுவிட்ட தோடு அதனைப்பற்றித் தனித்தனியாகவே நூல்கள் தொகுக்கப்பட்டன. இவ்வகையில், திருக்ஃகுர்ஆன் வசனங்களைப்பற்றிய பல்வேறு விரிவுரை கள் தொகுக்கப்பட்டும் வந்தன. அணுகுமுறைகளின்அடிப்படைக் கொள்கை களின் ஆதாரத்தில் அவை இரண்டு வகையானவையாக வகைப்படுத்தப் படுகின்றன:

www.uzairfalahi.com

### தஃப்சீர் பில் மாத்ஸூர்

இவ்வகையான விரிவுரைகளில் நபிமொழிகளின் அறிவிப்புகளின் ஆதா ரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு விளக்கங்கள் அளிக்கப் படும். இவற்றில் திருக்ஃகுர்ஆன் வசனங்களின் விரிவுரை மற்றும் விளக் கங்கள் திருக்ஃகுர்ஆன் வசனங்களைக்கொண்டும், நபிமொழிகளைக் கொண்டும், நபித்தோழர்கள் மற்றும் தாபியீன்களின் அறிவிப்புகள் மற்றும் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டும் அளிக்கப்படும். இவ்வகை யினைச் சார்ந்த நூல்கள் கீழ்வரமாறு:

1 **ஜாமிஉல் பயான் ஃபீ தஃப்சீரில் ஃகுர்ஆன்**
விரிவுரையாளர்: இப்னு ஜரீர் அத் தபரி

2 **தஃப்சீரில் ஃகுர்ஆன் அல் அஸ்ஜீம்**
விரிவுரையாளர்: இப்னு கத்ஸீர்

3 **அத்துர் அல் மன்த்ஸூர் ஃபித் தஃப்சீரில் மாத்ஸூர்**
விரிவுரையாளர்: ஜலாலுத்தீன் அஸ்சுயூத்தி

## த.்.ப்சீர் பிர் ராய்

இதுவும் ஒரு வகையான விரிவுரையாகும். இவ்விதமான விரிவுரைகளைத் தொகுப்பவர்கள், திருக்ஃகுர்ஆன் வசனங்களின் விளக்கங்களை ஆய்ந்தறிந்து இஜ்திஹாத், இஸ்திம்பாத் (ஒன்றின் குறிக்கோளைக் கண்டறிதல்), அரபிமொழி நுணுக்கங்கள், நடை, சொற்களின் பல்வேறு பொருட்கள் ஆகியவற்றுடன் தஃப்சீர் மாத்ஸூர், அஸ்பாபுன் நுஜ்ஸூல் எனப்படும் ஒரு வசனம் அருளப்பட்ட காரணக்கூறுகளின் அடிப்படையிலும், நாசிக்ஹ் மன்சூக்ஹ் ஆகியவற்றின் அறிவின் அடிப்படையிலும் அவற்றிற்கான விளக்கங்கள் மற்றும் விரிவுரைகளைத் தொகுத்துள்ளனர். இவ்விதமான விரிவுரைகளில் திருக்ஃகுர்ஆன் வசனங்களின் விரிவுரைகளை விளக்கிக் கூறுவதற்கான இன்றியமையாத அனைத்து அதாரங்களையும் கண்டறிந்த பின் அந்த அறிஞர் தன்னுடைய தனிப்பட்ட சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு இதனைத் தொகுத்தளிப்பார். இவ்வகையான விரிவுரை நூல்கள் கீழ்வருமாறு:

1 **ம.்.பாதீஹு ல் ங்கைப்**
*விரிவுரையாளர்: ஃபக்ஹ்ருத்தின் ராஜ்ஸி (மறைவு ஹிஜ்ரி 606)*

2 **அல் பஹ்ருல் முஹீத்**
*விரிவுரையாளர்: அபூ ஹய்யான் உந்துலுசி (மறைவு ஹிஜ்ரி 745)*

3 **இர்ஷாதுல் அ.்.க்ல் அஸ் சலீம்**
*விரிவுரையாளர்: அபூ சஊத் அல் இமாதி (மறைவு ஹிஜ்ரி 982)*

4 **ரூஹு ல் ம.்.ஆனி**
*விரிவுரையாளர்: ஆலூசி (மறைவு ஹிஜ்ரி 1270)*

தற்காலத்திலும் அறிஞர்கள் மற்றும் உலமாப் பெருமக்கள் திருக்ஃகுர்ஆன் விரிவுரைகளைத் தொகுத்தளித்துள்ளனர், அவற்றுள் சில கீழ்வருமாறு:

1 **த.்.ப்சீருல் மனார்**
*விரிவுரையாளர்: முஹம்மத் ரஷீத் ரஜ்தா*

2 **.்.பி ஸ்ஜிலாலில் .்.குர்ஆன்**
*விரிவுரையாளர்: சையித் ஃகுதுப்*

3 **த.்.ப்சீருல் .்.குர்ஆன்**
*விரிவுரையாளர்: ஷைஃக் அல் முராங்கி*

www.uzairfalahi.com

4 **த∴ப்சீருல் ∴குர்ஆன்**
*விரிவுரையாளர்: சையத் அபுல் ஆலா மவ்தூதி*

5 **ததப்புருல் ∴குர்ஆன்**
*விரிவுரையாளர்: அமீன் அஹ்சன் இஸ்லாஹி*

6 **த∴ப்சீர் தாவதுல் ∴குர்ஆன்**
*விரிவுரையாளர்: ஷம்ஸ் பீர் ஜ்ஸாதா*

*இதே அடிப்படையில் தற்காத்தில் முஸ்லிம்கள் திருக்ஃஃகுர்ஆனில் காணப் படும் அறிவியல் அம்சங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர், இவ்வகையி லான விரிவுரைகளில் ஒன்று கீழ்வருமாறு:*

1 **த∴ப்சீருல் ஜவாஹிர்**
*விரிவுரையாளர்: ஷேக் தன்த்தாவி ஜவ்ஹரி*

*தற்கால அறிஞர்களில் சிலர் பல்கலைக்கழகங்களில் ஆய்வுகளின் மூலம் நபித்தோழர்கள், தாபியீன்கள் மற்றும் தப்ஃஉத் தாபியீன்கள் ஆகியோரு டைய கூற்றுக்கள், கருத்துக்களை சேகரித்து முயற்சிகளை மேற்கொண்டுள் ளனர். திருக்ஃஃகுர்ஆன் விரிவுரைகளின் கைப்பிரதிகள் மீதான ஆய்வு மற் றும் தஃஃப்சீர் கலையின் இஸ்லாமியக் கலாச்சாரத்தின் மகத்தான சேவை களைப்பற்றி, குறிப்பாக, தஃஃப்சீர் கலை திருக்ஃஃகுர்அனில் கடமையாக்கப் பட்டுள்ள கட்டளைகளை அதற்கான ஆதாரங்களின் அடிப்படையில் கண்டறிவது மற்றும் மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இஸ் லாமியக் கலாச்சாரத்தின் விதிமுறைகள், சட்டதிட்டங்களை வகுப்பதில் உதவியாகவும் இருந்ததோடு, இக்கலையினை அதாரமாகக் கொண்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ள நூல்கள் அல்லாஹ் அருளிய வேதத்தின் குறிக் கோள்களை விளங்கிக்கொள்வதிலும் உதவியாக இருந்திருக்கின்றன.*

* * *

www.uzairdahi.com